# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,041 — 1934 ம் ஹூ பங்குனிமீ 28 ந் திகதி, புதன்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பொத்துவிலாச் சொயபாஷை பயிற்றும் ஆண் பாடசாலைக்காக என்னும் பகிரங்கதேவைகளுக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 269. குறிச்சி—பொத்துவிலா.

| துண்டு. | காணியினது பெயர் | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | களுவத்தை | தென்னைமரங்கள் 4, கயுமரம் 1, கொடபொரு மரம் 1, கறண்டை மரம் 1, கொற்றம்பா மரம் 1, வருடம் 20 தொடங்கி வருடம் 40 வரையும் வயதுள்ள பூஹுன் மரம் 1, நிலையான கட்டடத்தின் பகுதிகள், ஆதாரத்தொடர்ச்சியுள்ள சுவரின் பகுதி முதலியன அடங்கிய தோட்டம் | பொத்துவிலாவைச்சேர்ந்த (1) சிங்கப் புலிஆராச்சிகே தொன் ஆர்னோலிஸ் சிறிவர்த்தன, (2) தேவலவிதானகே மெனிக்காமி, (3) எண்டறகே கரோகாமி, (4) கருணைமுனி சைமன் சில்வா, (5) தொன் மாட்டின், அகலவத்தை, (6) பள்ளியகுருலலாகே தொன ஹாசி நோனா | 0 0 24·4 |
| 2 | ஷெ | தென்னைமரங்கள் 9, ஈமரங்கள் 4, கித்துள் மரம் 1, கொடபொரு மரங்கள் 4, கெட்டம்பை மரம் 1, கெந்தை மரம் 1, வருடம் 20 தொடங்கி வருடம் 40 வரையும் வயதுள்ள கிக்மரங்கள் 3, ஒரு வயதுள்ள பிளேயின்றேயின் புஸ்செஸ் 2, நிலையான கட்டடத்தின் பகுதி தற்போதைக்குரிய ஒரு கட்டடம் மேசன் வேலைசெய்யப்பட்ட 3 படிகள், ஆதாரச் சுவரின் பகுதி முதலிய அடங்கிய தோட்டம் | மொறகலாவைச்சேர்ந்த வில்லியம் த. சொயிசா குணபக்ஸா | 0 2 29·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஹூ சித்திரை மாசம் 20 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1934 ம் ஹூ பங்குனிமீ 22 ந் உ.

பீ. சரவணமுத்து,
உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கண்டியில் தெய்யனவெலாவிலுள்ள மாதிரிக் கட்டிடவாசிகள் பொருட்டு வண்டி, மாட்டுக் கொட்டில்கள் அமைத்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 44. குறிச்சி—தெய்யனவெலா, கண்டி நகரசங்க எல்லைக்குள், கண்டி டிஸ்திறிக்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கலகெற்றியாவ, வீட்டிலக்கம் 33A, 33B, 34 (தெய்யனவெலா ரோட்) | தோட்டம் .. | (1) ரி. ஏ. எஸ். பிள்ளை, கெற்றெம்ப, (2) பி. பி. வடுகொடபிட்டியா, கண்டி, நாத தேவாலயின் பொருட்டு | 0 | 0 | 13·6 |
| 2 | கலகெற்றியாவ அல்லது பத்தல முறெ, வீட்டிலக்கம் 2, 3, 3A, 3B, (ஆஸ்பத்திரி ரோட்) 34¹, 34¹A, 34½ (தெய்யனவெலா ரோட்) | தோட்டம் .. | (1) பி. எச். தியோனிஸ் பேரேரா, (2) நீனு பேரேரா, பி. சின்னேச்சி பேரேராவின் உரித்தாளர்கள், (3) பி. பி. வடுகொடபிட்டியா, நாததேவாலயின் பொருட்டு, எல்லாரும் கண்டி வாசிகள் | 0 | 0 | 12·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிலுப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஆண்டு (ஏப்றில்) சித்திரை மாசம் 30 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1934 ம் ஆண்டு மார்ச்சுமீ 21 ந உ.

டீ. சீ ஆர். குணவர்தன,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 8 ம் பிரிவிற் சுட்டிய 1 ம் அட்டவணையின் B. பிரிவின்படி அறிவித்தல்.

மட்டுக்களப்பு தாமரைக்கேணி அம்பலவாணர் கணேசமுதலி ஆகிய நான் என்னை மட்டுக்களப்பு டிஸ்திறிக்கிலே தமிழ்ப் பாஷையில் வேலைபார்க்கும் நொத்தாரிசுவாக ஏற்றுக்கொள்ளும்படி இன்று தொடக்கம் மூன்று மாசங்களுக்குப் பின் பதிவுகாரியஸ்த தலைவர் அவர்கட்கு விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேன் என்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

தாமரைக்கேணி, மட்டுக்களப்பு,
1934 ம் ஆண்டு மாசிமீ 22 ந உ.

அ. கணேசமுதலி.

ජාතික පුස්තකාල